IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

EA.01/2023 IN EP.82/2010 IN OS.150/2000

Deposition of Witness : PW 1

Name : சரவணன் (வயது – 42)

Father's Name /W/o : த/பெ மணி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : மாங்காட்டுச்சேரி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 21.07.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. மனு சொத்தில் எத்தனை சர்வே எண்கள் என்றால் 2. பழைய கிராம நத்தம் சர்வே எண் தெரியுமா எள்றால் தெரியாது. மனுவின் தெரிவித்துள்ள சொத்தின் 2 420/7 மற்றும் 420/6. என்னவென்றால் 420/7 மற்றும் 420/6. மேற்படி சர்வே எண்கள்.420/7 மற்றும் 420/6 குறித்து தான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. மனுவில் தெரிவித்துள்ள சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. என் பிரமாண வாக்கு மூலத்தில் வழக்கு தீர்ப்பு 420/6 குறித்து மட்டும்தான் வழங்கப்பட்டது என்றாலும் சர்வே எண்கள்.420/7 குறித்து தீர்ப்பு வழங்கப்படவில்லை என்றால் அதில் தவறாக தெரிவித்துள்ளது. யார் என் பிரமாண பத்திரம் தயார் செய்தது என்றால் என் பாட்டி சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார். மனு சொத்தின் முழு விபரம் என் பாட்டிக்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.420/7 ஆனது இந்த வழக்கில் ஊர்ஜிதம் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். (மேற்படி கேள்வி மனுதாரர் வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்படுகிறது). சர்வே எண்.420/7 சொத்து யாருக்கு உத்தரவு ஆனது என்றால் என் பாட்டி பெயருக்கு உத்தரவு ஆனது. வழக்கு எண்.5/2005 யார் யார் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் கணேசன் என்பவர் என் பாட்டி இந்திராணியம்மாள் பெயரில் தாக்கல் செய்தார். மேற்படி கணேசன் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் தெரியாது.

3. கணேசன் மேற்படி வழக்கு எவ்வளவு விஸ்திரணத்திற்கு தாக்கல் செய்தார் என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். வழக்கு எண்.150/2000 தீரப்பானயை எதிர்த்து என் தந்தை அல்லது என் பாட்டி மேல் முறையீடு தாக்கல் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மனு சொத்தை காலி செய்ய எதிர் மனு தாரர்கள், நீதிமன்ற அமீன், காவல் அதிகாரியுடன் வந்தார்களா என்றால் 1 முறை வந்தார்கள். மனு சொத்தில் நானும் திரிபுரசுந்தரியும் கட்டியுள்ள கட்டிடத்தை அப்புறப்படுத்த எதிர் மனுதாரர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். நான் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தேன். அது எந்த தேதி மற்றும் மாதம் என்றால் எனக்கு தெரியாது.

4. என்னிடம் காட்டப்படும் பட்டா இல் தோராயப் பட்டா தெரிவித்துள்ளதா என்றால் தெரிவித்துள்ளது. மா.சா.ஆ – 2 சிட்டா 19.10.2005 இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா எப்போது இறந்தார் என்றால் 27.04.2004 அன்று இறந்தார். என் தாத்தா இறந்ததற்கு பிறகு தான் மேற்படி மா.சா.ஆ – 2 சிட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் மா.சா.ஆ – 4 இல் தெரிவித்துள்ள முனுசாமி மகன் சுப்பிரமணி யார் என்றால் எனக்கு தெரியாது. இந்திராணி என்பவர் யார் என்றால் என் பாட்டி . மணி என்பவர் யார் என்றால் என் அப்பா. பாஸ்கர் என்பவர் யார் என்றால் என் சித்தப்பா. சாந்தி என்பவர் யார் என்றால் என்

அத்தை. கிருஷ்ணவேனி என்பவர் யார் என்றால் என் அத்தை. அமுதா என்பவர் யார் என்றால் என் அத்தை. மா.சா.ஆ – 4 வழக்கிற்கு பின்னிட்டுதான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மா.சா.ஆ – 7 முதல் 9 வரை வரி ரசீதுகள் 2020,2021,2014,2015 வருடத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வரி ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

6. மா.சா.ஆ – 11 இல் 2017 மற்றும் 2018 ஆண்டில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மா.சா.ஆ – 11 முனுசாமி பெயரில் வழங்கப்பட்டது ஆனால் அவர் யார் என்று எனக்கு தெரியாது என்று நான் சாட்சியம் அளித்தேன் என்றல் முனுசாமி மகன் சுப்பிரமணி எனக்கு தெரியாது முனுசாமி மகன் சுந்தர் என் அத்தை மகன் எனக்கு தெரியும். மா.சா.ஆ – 11 இல் வரி செலுத்துபவரின் கையொப்பம் இருக்கிறதா என்றால் இல்லை. மா.சா.ஆ – 15 என் தந்தை மணி திருவள்ளுர் மாவட்டம் போலிபாக்கம் வட்டத்தில் இறந்துவிட்டாரா என்றால் சரிதான். மேற்படி மா.சா.ஆ – 15 யார் வாங்கினார் என்றால் நான் வாங்கினேன்.

7. அமுதா என்பவர் எங்கு வசிக்கிறார் என்றால் செங்கல்பட்டில் வசித்து வருகிறார். மேற்படி அமுதா (9 ஆவது பிரதிவாதி) என்பவர் எவ்வளவு ஆண்டுகளாக செங்கல்பட்டில் வசிக்கிறார் திருமணமாணதிலிருந்து வசித்துவருகிறார். மேற்படி அமுதா எத்தனை ஆண்டுகள் முன்பு திருமணம் நடைபெற்றது என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பு. நான் தாக்கல் செய்த மனுவில் அமுதா மாங்காட்டுச்சேரியில் வசித்து வருவதாக தெரித்துள்ளேன் என்றாலும் தற்போது 20 ஆண்டுகளாக செங்கல்பட்டில் வசித்து வருகிறார்கள் என்றாலும் இரண்டும் முரணாக இருக்கிறது என்றாலும் எனக்கு தெரியாது.

8. நான் தாக்கல் செய்த மனு யார் சொல்லி தாக்கல் செய்தது என்றால் என் பாட்டி சொல்லி தயார் செய்தது. என் மனுவில் 3 ஆவது மனுதாரர் எங்கு வசிக்கிறார் என்றால் போலிவாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறார். எத்தனை

வருடமாக அங்கு வசிக்கிறார் என்றால் 10 ஆண்டுகளாக வசிக்கிறார். நான் மாங்காட்டுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மா.சா.ஆ – 20 போலிப்பாக்கத்தில் வசித்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் நான் மாங்காட்டுச்சேரியில் வசிப்பதாக 2023 இல் தாக்கல்செய்துள்ள மனுவில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.